Registered as a Newspaper in Ceylon ★ விலை 10சதம்

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (13-12-65) இதழ் 304

விசுவாவசு கார்த்திகை 28 ஷஃபான் பிறை 19 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க. வைர நகைகளுக்கு
போன் 585 PHONE 585



K. N. M.
மீறன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## கருதினல் கூரேக்கு சத்திரசிகிச்சை

லண்டன், டிச. 12

கருதினல் தோமஸ் கூரேக்கு நேற்று ரோமில் அவசர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது. முன்னர் குறிப்பிட்டபடி அவர் இம்மாதம் 18-ம்திகதி இலங்கைதிரும்ப மாட்டார் என்றும் அதிமேற்றிராணியார் மாளிகை அறிக்கையொன்று கூறுகிறது.

# பேராதனையில் அமைதி; இருவர் நிலை அபாயம்

## சேர். அட்டிகலே ராஜினாமாசெய்ய வேண்டுமென மாணவர் கோரிக்கை

### நிலைமையை நேரில் ஆராய மந்திரி கண்டிக்குச் சென்றார்

கண்டி, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொலிசாருக்கும் விரிவுரைகளைப் பகிஷ்கரித்துவந்த மாணவர்களுக்குமிடையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற கைகலப்பின் விளைவாகவும் பொலிசாரின் தடியடிப்பிரயோகம், துப்பாக்கிப்பிரயோகம் காரணமாகவும் காயமடைந்து கண்டி ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமானதாக இருப்பதாக இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. கைகலப்பில் காயமடைந்த பொலிஸ சார்ஜன்ட் செனிவிரத்தினவின் நிலையும் அபாயகரமாகவுள்ளதாம்.

### மந்திரி பேராதனை சென்றார்

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல, பேராதனைப் பல்கலைக் கழகச் சம்பவம்பற்றி நேரில் ஆராய்வதற்காக இன்று மாலை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றதாகத் தெரியவருகிறது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ மாணவியருள் வண. ஆனந்ததேரோ என்ற பௌத்த பிக்குவும், பி. எல். வேலுப்பிள்ளை, பி. வி. சிவகுரு, யு. அழகக்கோன் ஆகியோர் சிலராவர்.

### அமைதி நிலவுகிறது

பல்கலைக்கழகப் பகுதியில் இப்பொழுது அமைதி நிலவுவதாகவும் அறிக்கையொன்று கூறுகிறது. சனிக்கிழமைச் சம்பவத்தைத் தொடர்ந்து பல்கலைக்கழகப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தின்போது பேராசிரியர் ஹிலாரியன் குரூஸ் என்பவரின்மோட்டார் காருக்கு மாணவர்கள் தீ வைத்ததாகவும்அக் கார் முற்றாகச் சேதமடைந்துவிட்டதாகவும் தெரிகிறது. பத்திரிகை நிருபர்களும் படப்பிடிப்பாளர்களும் பல்கலைக்கழகப் பகுதியில் அனுமதிக்கப்படவில்லை. பல்கலைக்கழகப்பகுதி போர்நடந்து முடிந்த யுத்தகளம் போன்று காட்சியளிக்கிறது. விஜயவர்த்தன மண்டபத்துக்கு அருகில்தான் கைகலப்பு, வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்றதாகத் தெரிகிறது.

### நிக்கலஸ ராஜினமா செய்யவேண்டும்

சென்ற சில தினங்களாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வேலைநிறுத்தம் செய்துவந்த மாணவர்கள் நேற்று மாலைகூட தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்தனர். தங்களது பன்னிரண்டு கோரிக்கைகளுடன் மேலும் ஒரு கோரிக்கையை அவர்கள் சேர்த்ததுடன் அதையே முதலாவது கோரிக்கையாகவும் சேர்த்துள்ளனர். பல்கலைக் கழக உபஅத்தியட்சகர் பதவியிலிருந்து சேர் நிக்கலஸ் அட்டிகலே ராஜினமா செய்யவேண்டுமென்பதுதான் அவர்களது புதிய கோரிக்கையாகும்.

## யாழ். நகரமத்தியில் மற்றுமொரு படுகொலை

### சந்தேகநபர் கத்தியுடன் சரணடைந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றுக்காலை, யாழ்ப்பாணம் நகர மத்தியில், பெரியகடைப் பகுதியில், கஸ்தூரியார் வீதியில், ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். கத்திக் குத்துக்குள்ளான, தச்சுத் தொழிலாளியான சின்னையா என்பவர் அந்த இடத்திலேயே விழுந்து மாண்டார். நேற்றுக்காலை எட்டு மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

கொலையுண்ட சின்னையா கஸ்தூரியார் வீதிவழியாக வந்து கொண்டிருந்ததாக அப்பொழுது அதேவீதியால் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த ஒருவர், சின்னையாவை தடுத்து நிறுத்தியதாகவும் சின்னையா நின்றதும் அந்தநபர், கையில் மறைத்து வைத்திருந்த கிறிஸ் போன்ற ஒரு கத்தியால், சின்னையாவின் நெஞ்சில் இரண்டு தடவைகள் குத்தியதாகவும் உடனே சின்னையா கிழே விழுந்து, துடிதுடித்து மாண்டதாகவும் கூறப்படுகிறது.

குத்தியதாகக்கருதப்படும் நாகராசா என்பவர் அந்த இடத்தை விட்டு ஒரு சைக்கிளில் ஸ்டான்லி வீதி வழியாகச் சென்று ஒரு சமாதான நீதவானிடம் சரண் புகுந்ததாகச் சொல்லப்படுகிறது.

இதனைத் தொடர்ந்துஇச் சம்பவம் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் விரைந்து வந்து சந்தேக நபரைக் கைது செய்தனர். சின்னையாவைக் குத்துவதற்கு பயன் படுத்தியதாகக் கூறப்படும் 'கத்தி' பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இச்சம்பவத்துக்கு திருமண சச்சரவு காரணமென்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் நீதிபதி ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார். யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சௌந்தரநாயகத்தின் தலைமையில் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

### ஒன்றரை மாதத்தில் இரண்டாவது கொலை

கடந்த மாதம் 8-ம் திகதி யாழ்ப்பாணம் நாவலர் சத்தியில் பட்டப்பகலில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். கடந்த 34 நாட்களுக்குள் யாழ்ப்பாண நகரில் இரண்டாவது நபர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

## "ஒற்றுமையின் மூலமே நாடு முன்னேறும்"

### திருமலையில் பிரதமர் டட்லி பேச்சு

திருக்கோணமலை, ஞாயிறு

"இந்நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கிடையிலும் நல்லுறவும் நட்புறவும் நிலவ வேண்டுமென்பதும் தேசிய ஒற்றுமையின் மூலமே நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுமென்பதும் தேசிய அரசாங்கத்தின் விருப்பமாகும். ஐக்கியத்தின் மூலம் நாட்டின் சுயதேவைப் பூர்த்தியை அடைய நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்."

இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் முதல் தடவையாக இன்று திருக்கோணமலைக்கு விஜயம் செய்தபோது கூறினார்.

திருக்கோணமலையில் இன்று நடைபெற்ற "கடற்படை தின" வைபவத்தில் திரு. டட்லி சேனநாயக்கா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

காலை 8 மணிக்கு இலங்கை விமானப்படை விமானத்தில் சீனக்குடா விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமரை விங்கமாண்டர் பி. மெண்டிஸும் மற்றும் கடற்படையினரும் வர

(6-ம் பக்கம்பார்க்க)

## ஜி. ஜி. 27-ல் வருவார்

யாழ்ப்பாணம், திங்கள்

ஐக்கியநாடுகள் சபைக்கு இலங்கைக் கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச்சென்றுள்ள யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இம்மாதம் 27-ம் தேதி திங்கட்கிழமை கொழும்புவந்து சேருவார் என்று உடுப்பிட்டி எம். பி. யும் தமிழ்க்காங்கிரஸ் பொதுக்காரியதரிசியுமான திரு. எம். சிவசிதம்பரம் நேற்று நமதுநிருபரிடம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் வரவேற்பு ஒழுங்குகளை எல்லாம் தமிழ் காங்கிரஸ் கொழும்புக் கிளை செய்துவருவதாகவும்கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஜனவரி முதல் தேதி திரு. பொன்னம்பலம் வருவாரென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நியூயோர்க்கிலிருந்து இம்மாதம் 16-ம் திகதி புறப்படும் திரு. பொன்னம்பலம், இலங்கை வரும் வழியில் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு அந்நாட்டு பிரதிநிதிகளின் அழைப்பின்பேரில் விஜயம் செய்வாரென்றும் அறியப்படுகிறது.

## 200 வியட்காங் துருப்புகள் பலி

சைகோன், டிச. 12

சைகோன் அருகே வியட்காங் நிலை மீது தென்வியட்னும் அரசாங்க துருப்புகள் நடத்திய தாக்குதலில் 200-க்கும் அதிகமான வியட்காங் துருப்புகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்னும் அரசாங்க துருப்புகள் கடந்தசில நாட்களில் நடத்திய பெரும் தாக்குதல் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கிராம மக்களெல்லொரும் ஒற்றுமையாய் தொழிலாளி-முதலாளி, தனவந்தர் என்ற வேறுபாடின்றிச் சேர்ந்து வாழ்ந்து கிராம நலனுக்காக தத்தம் ஆற்றலைப் பயன்படுத்த முன் வராத வரையில் நாடு ஆபத்தின்றி இருப்பதாக எண்ணுவதற்கில்லை.

—விநோபாஜி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

...ணம்விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 28 உ (13-12-65)

## பேராதனைச் சம்பவம்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து 'வேலை நிறுத்தம்' செய்து வந்த மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பிலும், பொலிஸாரின் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றிலும் மாணவிகள் உட்பட இருநூறுபேர் காயமடைந்துள்ளதாகவும், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் மற்றும் சில மாணவர்களும் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையிலுள்ளதாகவும் செய்திகள் கிடைக்கின்றன. இச்சம்பவம் வேதனையளிப்பதாகும்.

பேராதனைப் பலகலைக் கழகத்தில் கல்விபயிலும் விஞ்ஞான, பொறியியல் பிரிவு மாணவ மாணவிகள் சென்றசில தினங்களாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்து 'வேலைநிறுத்தம்' செய்து வந்தனர். விடுதி வசதி, விரிவுரை வசதிகள் சீர்திருத்தப்பட வேண்டுமென்றும் பல்கலைக்கழக உப அத்தியட்சகருடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக பேராசிரியர் ஒருவர் தமது பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்ததை ஆட்சேபித்து அவரை மீண்டும் பதவியிலமர்த்த வேண்டுமென்றும் மொத்தம் பன்னிரண்டு கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் 'வேலை நிறுத்தம்' செய்துவந்தனர். இதே சமயம் கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் பல்கலைக் கழகப்பிரிவு மாணவர்களும் வித்தியோதய பல்கலைக்கழக மாணவர்களும் இதுபோன்ற சில வசதிக் குறைவுகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென, சிலகோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்தனர். உயர் கல்விபெறச்சென்ற வருங்காலத் தலைவர்களான எமது இளம் சந்ததியினர், கல்வி பெறுவதில் தமக்குரிய கஷ்டங்களை மேலிடத்துக்கு எடுத்துக் கட்டி நிவாரணம் பெற வேண்டியது அவசியம்தானென்றாலும், தொழிற்சங்க இயக்கங்கள்போல 'வேலைநிறுத்த' நடவடிக்கைகளில் ஈடுபடுவது நல்லதல்லவென்பதே பலரின் பொதுவானகருத்தாகும். என்றாலும் குதிரைப் பந்தயத்திடல் பல்கலைக்கழக மாணவரினதும், வித்தியோதய பல்கலைககழக மாணவரினதும் குறைகளையும் கோரிக்கைகளையும் ஆராய்ந்து அவற்றிற்கு ஒரு சுமுகமான முடிவு கண்ட கல்விஅமைச்சரும் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளும், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் பிரச்னைகளுக்கும் சுமுகமான தீர்வு காண்பர் என்றே எதிர்பார்த்தனர். இதற்கு மாருக நிலைமை மோசமாகி, மாணவர்மீது பொலிஸார் 'எவி' விடப்பட்டது வேதனையும் ஏமாற்றமுமளிப்பதாகும். மாணவர்கள்உப அத்தியட்சகரின் இல்லத்திற்கு தீயிட்டதாகவும், வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதாகவும்இதனால் தான்பொலிஸார் அழைக்கப்பட நேரிட்டதென்றும் சமாதானம் கூறலாம். மாணவர்கள் வன்முறைச்செயல்களில் ஈடுபடுவதற்கு ஆத்திரமூட்டும் செயல்களெதுவும் இல்லாமலிருக்க முடியாது. மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அதிகாரிகளுக்குமிடையில் நல்லுறவு இருக்கவேண்டும். இந்தநல்லுறவு இருந்திருந்தால் நிலைமை இவ்வளவு மோசமாகியிருக்கவும் பொலிஸார் தங்கள் 'அஸ்திரங்களை'ப் பிரயோகித்திருக்கவும் ஏற்பட்டிருக்காது.

பொலிசார் - மாணவர் கைகலப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து பல்கலைக் கழகப் பகுதியில் ஊரடங்கு உத்தரவுபிறப்பிக்கப் பட்டிருக்கிறது. பல்கலைக் கழகப் பகுதியே போர் நடந்து முடிந்த ஒரு களமாகக் காட்சியளிக்கிறதாம். உயர் கல்வி பெறுவதற்காக தங்கள் பிள்ளைகளை, பெருந் தொகையான பணச்செலவையும் பொருட்படுத்தாது அனுப்பிவைத்த பெற்றோர், இக்காட்சியைக் காணும் பொழுது அவர்கள் மனம் என்ன பாடுபடும்?

பேராதனைச் சம்பவங்கள்பற்றி முழு விபரத்தையும் அறிந்து பூரண விசாரணை செய்யப்போவதாக கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார். ஒரு வாரத்துக்கு முன்னரே இதை அவர் செய்திருந்தால் இந்தப் பரிதாப சம்பவங்கள் நடந்திருக்காது. என்றாலும் இனிமேலும் இதுவித சம்பவங்கள் நேராமலிருக்கவும் இச்சம்பவங்களுக்குரிய உண்மைக் காரணங்களை ஆராய்ந்து அவற்றிற்குத் தக்க பரிகாரம் காணவும் பல்கலைக்கழக நிர்வாகம், கல்வி முறைபற்றி பூரணமாக விசாரணை செய்ய வேண்டும். பேராதனை சம்பவம் வருங்காலத்தில் இங்கு உயர் கல்விப் பிரச்னைகள் ஏற்படாமலிருக்க ஒரு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இதேசமயம் இந்நாட்டில் பல்கலைக்கழக இட வசதிக்கு ஏற்பாடு செய்யவும், மேலும் சில பல்கலைக் கழகங்களையும் பல்கலைக் கழகப் பிரிவுகளையும் ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும் இச்சம்பவம் உணர்த்தியுள்ளது. இனியும் கல்வி அமைச்சரும் அரசாங்கமும் உண்மை நிலையை உணராமலிருக்க முடியாது. மாணவர்களின் குறைகளைப் பொலிஸ் படையைக் கொண்டு அடக்கிவிட முடியாது. நாட்டின் பல பகுதிகளிலும் பல்கலைக் கழகங்கள் அல்லது பல்கலைக்கழகப் பிரிவுகளை விரைவில் அமைப்பதன் மூலமே இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்.

## தேசிய ஒற்றுமைக்கும்அமைதிக்கும் ஆபத்து அதிகரிப்பு

## 'ஒப்பந்தம்' உண்மையா? இதில் ரகசியம் ஏன் ?

—நமது அரசியல் நிருபர்—

"எதிர்க்கட்சிகளின் துவேஷ இயக்கம், அற்ப விஷயமல்ல; தேசிய முன்னேற்றத்தை வகுப்புவாத வெறி தடுக்கின்றது" என்ற பெரிய கொட்டை எழுத்துத் தலைப்புடனே 'டெயிலி நியூஸ்' பத்திரிகையின் அரசியல் நிருபர் எச்சரிக்கின்றார்.

அநேகமாக ஒவ்வொரு நகரங்களிலும் கிராமங்களிலும் சுவர்களிலே வகுப்புத் துவேஷ சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளனவாம். ஸ்தல ஸ்தாபன தேர்தலுக்காக இது எழுதப்படவில்லை என்றும், எதிர்க் கட்சிப் பத்திரிகைகள் வகுப்புவெறிப் பிரசாரத்தை செய்வதாகவும் அவர் கூறி, பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் தேசத்தைப் பிளவுபடுத்தக் கூடியதென்றும், வகுப்பு வேற்றுமையற்ற ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதால், தேசிய ஐக்கியத்துக்கும் முன்னேற்றத்துக்குமான ஒரு புதிய தீர்வு ஏற்படுவதற்குத் திட்டமான நம்பிக்கை இருப்பதாகவும் கூறுகின்றார்.

ஃ ஃ

அந்தப் புதிய தீர்வின் விவரங்களைப் பற்றியோ, புதிய நம்பிக்கைக்கான ஆதாரங்களைக் குறித்தோ விபரம் எதுவும் தரப்படவில்லை. டட்லி — செல்வநாயகம் "ஒப்பந்த"த்தைப் பற்றியும் அதில் எதுவும் குறிப்பிடவில்லை. அவ்வித "ஒப்பந்தம்" இருக்கிறதா? அல்லது அது ஓர் "உடன்பாடு" தானா? அதை அடிப்படையாகக் கொண்டே புதிய தீர்வு காணலாமென்கிறார் அந்தநிருபர்?

ஒப்பந்தம் ரகசியமாக கையெழுத்தாகி இருப்பதாக எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் கூறி, அதன் விவரங்களையும் வெளியிட்டன. எதிர்க்கட்சிகள் துவேஷ, பொய்ப்பிரசாரம் செய்வதாக பிரதமர் கூறினாரென்றாலும் ஒப்பந்தம் இல்லை என்று திட்டவட்டமாக மறுக்கவில்லை. தமிழரசுக் கட்சியாரும் இதை மறுக்கவோ அல்லது ஒப்பவோ இல்லை.

இதற்கிடையே "களுத்துறை ஜாதிக அரக்ஷக பொரமுனை என்று ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளதாயும், சிங்கள சமூகத்தையும் பௌத்தமதத்தையும் "காப்பாற்றுவது" அதன் நோக்கமென்றும் 'ஜனதின' என்ற எதிர்க் கட்சிப் பத்திரிகை தெரிவிக்கிறது. அதன் ஆரம்பக் கூட்டத்தில் பிக்குகளும், பொது மக்களும் கலந்து கொண்டதாயும், "டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த ஓர் இயக்கத்தை ஆரம்பிப்ப"தென்று தீர்மானிக்கப்பட்டதாயும் அச்செய்தி கூறுகிறது.

அந்த "ஒப்பந்தம்" கையெழுத்தானது உண்மையே என்றும், அதன் பிரதியை ஒவ்வொரு வீட்டிலும் தாங்கள் விநியோகிக்கப் போவதாயும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஒருவர் செனேட் சபையில் தெரிவித்தார்

ஃ ஃ ஃ

இப்போது நடைபெற்று வரும் ஸ்தலஸ்தாபன தேர்தல்களிலும் இந்த "ரகசிய ஒப்பந்த"த்தைப்பற்றி எதிர்க்கட்சியினர் பிரமாதப்படுத்துவ[illegible] டட்லி [illegible] 'ஒப்பந்த' மூலம் துரோகம் செய்துவிட்டதாகப் பிரசாரம் செய்கின்றனர். இந்தத் தேர்தல்களிலே யு. என். பி. க்கு விசேஷ ஆதரவு இல்லாததை 'ஜனதின' சுட்டிக்காட்டி, பொதுமக்கள் உண்மையை உணர்ந்துவிட்டதே இதற்குக்காரணமென்றும், அந்த ஒப்பந்தத்தின் முதல் விதியின்படி, தமிழ்ப் பகுதிகளிலே தமிழில் அரசாங்க நிர்வாகம் நடக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாயும், தமிழ் கிளார்க்குமார்கள் ஜனவரியிலிருந்து அங்கு நியமிக்கப்படுவரென்றும், ஒப்பந்தம் ஏற்கனவே அமுல் செய்யப்படுவதாகவும் கூறுகின்றது.

டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தத்தைப்பற்றிய "பொய்ப் பிரசாரத்துக்கு" ஒரு மாதத்திலே பிரதமர் பதில் சொல்லுவாரென்று "லங்காதீப" பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று. "ஏன் ஒரு மாதமாகவேண்டும். சிங்களவர் 8 மாதம் பொறுத்துவிட்டனர். இது சிங்களவரின் சாவோலையாகும். ஆகவே நாளைக்கே பதில் கூறவேண்டும்" என்று "எத்த" என்ற பத்திரிகை சவால் விட்டுள்ளது.

"ஒப்பந்தம்" அல்லது 'உடன்பாடு' ஏற்பட்டுள்ளது உண்மை என்றும் அது பழைய "பண்டா செல்வா" ஒப்பந்தத்தை விட தமிழருக்குக் குறைந்த சலுகைகளையே அளிப்பதாகவும், ஆகவே இதை இனியும் மழுப்பாமல் தமிழுக்கு நீதி வழங்கவும், தேசிய ஒற்றுமையைக் காக்கவுமே தாம் இதில் கையொப்பமிட்டதாகவும் துணிச்சலுடன் பிரதமர் அறிக்கை வெளியிட வேண்டுமென்றும் தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கும் ஒருவர் தெரிவித்ததாக நம்பகரமாக அறிகிறேன்.

அரசியல் விஷயங்களிலே கூடுமானவசை ரகசியங்கள் எதுவும் இல்லாமல் பகிரங்கமாகக் காரியங்கள் செய்வதே மேலாகும். எதிர்க்கட்சிகள் செய்யும் துவேஷ பிரசாரம் காரணமாக இந்த ஒப்பந்தமும், "பண்டா—செல்வா" ஒப்பந்தம்போல் கிழித்தெறியப்படுமா?

இது எப்படியாயினும், இலங்கையில் மீண்டும் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு பழைய பயங்கர சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டியது அரசாங்கம்மட்டுமன்றி எதிர்க்கட்சிகளின் மேலான கடமையும் பொறுப்புமாகும்.

"ஜன சத்திய" எனும் பத்திரிகையின் ஆண்டு விழாவிலே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகையில், "கூடிய சீக்கிரத்தில் இப்போதுள்ளதைவிட மோசமான நிலைமை ஏற்படலாம். நாமெல்லாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்" என்று எச்சரித்தாராம். இரத்தம் சிந்தவும் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் கூறியதாக "டைம்ஸ்" பத்திரிகை வெளியிட்ட செய்தி முற்றிலும் ஆதாரமற்றதென்று அவர் மறுத்திருப்பது வரவேற்கத்தக்கது. தேசிய அமைதியையும், ஒற்றுமையையும் முன்னிட்டு, பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் கூடிப்பேசி, தேசியப் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்க ஏன் முன்வரக் கூடாது? பழைய அனுபவங்கள் நமக்குப் பெரிய எச்சரிக்கையாகவும் பாடமாகவுமிருக்கவேண்டும்.

ஏழுகட்சி கூட்டானதாகக் கூறப்படும் தேசிய அரசாங்கம் சீக்கிரம் பத்துக் கட்சி கூட்டாக ஆகலாம் என்று

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஒரு வாரம் தங்கியிருந்தேன். அடுத்த சனிக்கிழமை அங்கு மாநகர சபைத் தேர்தல். சாதாரணமாக தேர்தல் ஜுரம், ஜன்னிகண்டிருக்கவேண்டிய சமயம் இது. ஆனால் இப்போதோ, கொடிகள், ஊர்வலங்கள், சுவரொட்டிகள், கோஷங்கள் ஒன்றும் காணோம். எல்லாம் மிக அமைதி. பார்லிமெண்ட் தேர்தல் விதிகளை நகரசபை தேர்தலுக்கும் அமுல் நடத்தத் தீர்மானித்ததற்காக நன்றி கூறவேண்டும்.

ஃ ஃ ஃ

என்றாலும் வீட்டுக்கு வீடு படியேறி வந்து, அபேட்சகர்கள் வாக்காளரைப் பல விதங்களிலும் மன்றாடிக் கேட்கின்றனர். ஓர் உதாரணம்: அந்தத் தொகுதியில் மூன்று வேட்பாளர்கள் யு. என். பி. பிரதிநிதியே இப்போது இருப்பவர். தெரு மிக மோசமாக இருப்பதை அவரிடம் கூறியபோது இன்னும் 6 மாதங்கள் எல்லாம் சரி செய்து விடுவதாயும், இது சத்தியம் என்றும் சொல்லி, தம்மையே இம்முறையும்அனுப்பும்படி கேட்டார்.

அடுத்து கூட்டுக் கட்சியின் சார்பாக ஒரு பெண்மணி போட்டியிடுகிறார். அப்பெண், நேரே வீட்டுக்குள் சென்று, பெண்கள் பெண்ணையே ஆதரிக்கவேண்டும் என்று கன்னத்தைத் தொட்டுக் கேட்டு, இந்த ஒரு முறை 'சான்ஸ்' கொடுத்துப் பார்க்குமாறு மன்றாடிச் சென்றார்.

பின்னர் சுயேச்சையாகப் போட்டியிடும் ஓர் அபேட்சகர், தாம் உண்மையில் தமிழரசுக்கட்சிக் கொள்கையை ஆதரிப்பதாயும், ஆனால் சில காரணங்களால் தாம் அதை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லையென்றும், தாங்கள் வீட்டில் பேசுவதும், திருக்குரான் படிப்பதும் எல்லாம் தமிழில் தான் என்றும் வாதித்து, தம்மையே ஆதரிக்குமாறு கேட்டார்.

பாவம். நமக்காக கைமாறு எதிர்பாராமல் எவ்வளவு பேர் தொண்டு செய்ய போட்டா போட்டியுடன் காத்திருக்கிறார்கள்! இவ்வளவு தியாகிகள் இருக்கையில் இங்கு நமக்கும் ஜனநாயகத்துக்கும் என்னகுறை

ஃ ஃ ஃ

இந்த முறையும் யு. என். பி. கொழும்பிலே வெல்லுமா என்று விசாரித்தேன். ஏற்கெனவே 47 தொகுதிகளில் 38 மெம்பர்கள் அக்கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்தத்தடவையும் அக்கட்சியே வெல்லலாமென்றாலும், சென்றதடவையைவிட மெஜாரிட்டி வெகுவாகக் குறையுமென்று, அக்கட்சி ஆதரவாளரில் ஒருவரே சொன்னார்.

ஃ ஃ ஃ

இலங்கை இந்திய வர்த்தக சங்கத் தலைவர் எம். சுப்பிரமணியம் அவர்கள் சங்கத்தின்சார்பாக ஹோட்டல் 'தாப்ரபேன்' (பழைய ஜி. ஓ. எச்.) ஓட்டலில் ஓர் விருந்தளித்தார். புதிய நிர்வாகத்திலே அந்த ஹோட்டல் 'ஏர் கண்டிஷன்' செய்யப்பட்டு, நவீன முறையில் மேல் நாட்டு ஓட்டல்களைப் போல் மிக கவர்ச்சியாகவுள்ளது.

தலைவர் பேசுகையில், இக்காலத்தில் இறக்குமதி, இமிக்கிரேஷன் கட்டுப்பாடுகள் அதிக கண்டிப்பாக இருப்பி

(5-ம் பக்கம் பார்க்க)

காலியிலே பிரதமர் ஒரு கூட்டத்தில் கூறினாராம். 'ஜனதின' கூறுகிறது உண்மை தானா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிட்டனுக்கு மூன்றுநாள் தவணை

## "ஸ்மித் அரசாங்கத்தை நசுக்காவிட்டால் உறவுமுறியும்"

### ஆபிரிக்க நாடுகள் எச்சரிக்கை

லண்டன், டிச. 12

ரொடீஷியா சம்பந்தமாக ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து பிரிட்டன் நெருக்கடியான கட்டங்களை எதிர்நோக்கியுள்ளது.

இம்மாதம் பதினைந்தாம் திகதி புதன்கிழமைக்குள் ஸ்மித் அரசாங்கத்தை நசுக்கவேண்டுமென்று அண்மையில் அடிஸ்அபாபா ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் அறிவித்திருந்தது.

இத்திட்டம் செயல்படாத பட்சத்தில் பிரிட்டனுடனான சகல பொருளாதாரத் தொடர்புகளையும் ராஜீய தொடர்புகளையும் முறிக்க வேண்டுமென்று ஆபிரிக்க நாடுகளைக் கோரியிருந்தது.

புதன்கிழமைக்குள் ஸ்மித் அரசாங்கத்தை நசுக்காவிட்டால் பிரிட்டனுடனான ராஜீயத் தொடர்புகளை முறித்துக்கொள்வோம் என்று பல ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனை எச்சரித்துள்ளன.

புதன்கிழமைக்குள் ஸ்மித் அரசாங்கத்தை நசுக்க வேண்டும் என்று அல்ஜீரியா பிரிட்டனுக்கு அறிவித்துள்ளது. இதே மாதிரி ஐக்கிய அரபுக் குடியரசு, சூடான், ஸாம்பியா ஆகிய நாடுகளும் எச்சரிக்கை செய்துள்ளன.

## 45 பேரை காணவில்லை

புதுடில்லி, டிச. 12

இந்தியாவின் மேற்குகரையோரப் பகுதிகளில் வீசிய புயலினால் 45பேர் காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்பதுபடகுகள் காணாமற் போய்விட்டன.

## ஜெனிவா மகாநாடு

வாஷிங்டன், டிச. 12

ஜெனிவா படைக்குறைப்பு மகாநாடு ஜனவரி மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகும். (பி.டி.ஸி.)

## துப்பாக்கிப்பிரயோகம் நீடிக்கிறது

ஷில்லாங், டிச. 12

அஸாம் எல்லையில் பாகிஸ்தானியர் தொடர்ந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடியாபகுதியில் இரண்டு இந்தியர்களை பாகிஸ்தானியர் கடத்திச்சென்றனராம்.

# விண்வெளிக் கப்பல்கள் வெளிவானில் சந்திப்பு

## 'ஜெமினி-7' பிரயாணிகள் நூறுதடவை பூமியை வலம் வந்தனர்

ஹவுஸ்டன், (டாக்ஸஸ்) டிச. 12

உண்டு, உறங்கி ஓய்வெடுத்து பல ஆராய்ச்சிகள் நடத்தி அதிசயம் பல கண்டு ஜெமினி—7 விண்வெளிக் கப்பலில் பூமியை வலம் வரும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் இருவரும் சுமார் ஒரு வார காலம்வரை வெளிவானமண்டலத்தில் சஞ்சரித்து நூற்றுக்குமதிகமான தடவைகள் பூமியைச் சுற்றிவிட்டனர்.

இரு விண்வெளி வீரர்களும் ஆரோக்கியமாக இருப்பதாக டாக்டர்களின் அறிக்கை தெரிவிக்கிறது.

இதற்கிடையே இன்று கென்னடி முனையிலிருந்து மற்றுமொரு விண்வெளிக் கப்பலை (ஜெமினி—6) அமெரிக்கா வானவெளிக்கு அனுப்புகிறது. பூமியிலிருந்து வெளிவானமண்டலத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆறு மணித்தியாலங்களுக்குப் பின்னர் இவர்கள் 'ஜெமினி—7' விண்வெளி பிரயாணிகளைச் சந்திப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது சாத்தியப்படாத பட்சத்தில் நாளை ஒரு விண்வெளிக்கப்பல் பூமிக்கு வரவழைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

# "திறந்த மனதுடன் டாஷ்கண்ட் செல்கின்றேன்

## எமது சந்திப்பு பலனளிக்கட்டும்"

— பிரதமர் சாஸ்திரி

புதுடில்லி, டிச. 12

திறந்த மனதுடன் டாஷ்கண்ட் செல்லவிருக்கின்றேன் என்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

''இந்திய - பாகிஸ்தான் நெருக்கடிகள் மோசமடைந்திருந்தாலும் இவற்றைக் குறைத்து இரு நாடுகளும் சுமுகமான ஒரு சூழ்நிலையில் வாழவே நாம் விரும்புகின்றோம். ரஷ்யாவின் கோரிக்கைமீது டாஷ்கண்ட் செல்லவிருக்கும் நான் அமைதியான வழியொன்றைக்காண விரும்புகின்றேன். இந்தியாவின் உள்விவகாரங்களைத் தவிர்ந்த ஏனைய பிரச்னைகளை சுமுகமான முறையில் தீர்த்துவைக்கவே இந்தியாவிரும்புகிறது. இதற்கு பாகிஸ்தானும் ஒத்துழைக்குமானால் இருதேச உறவுகளும் நிச்சயம் சீரடையும்'' என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

### சீனாவின் உறவுகள்

''கம்யூனிஸ்ட் சீன படைபலத்தில் தன்னிறைவு பெற்றிருந்தாலோ அல்லது போதுமானஅளவு படைபலம் கொண்டிருந்தாலோ அது எம்மை ஒன்றும் பாதிக்கமாட்டாது'' என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

இந்தியா மீதான தனது ஊடுருவல் நடவடிக்கைகளை சீன விஸ்தரித்திருக்கிறது. எதனையும் சமாளிக்கும்சக்தி எம்மிடம் இருக்கிறது. என்றும் அவர் கூறினார்.

# டானங் அருகே கடும் சண்டை

## நூற்றுக்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர்

சைகோன், டிச. 12

டானங் விமானத்தளம் அருகே கரையோரப் பகுதியில் தென்வியட்னும் அரசாங்க துருப்புகளுக்கும் வியட்காங் துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இந்தச் சண்டையில் இரு பகுதியினருக்கும் அதிக உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி நூற்றுக்குமதிகமானவர்கள் மாண்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

தென்வியட்னும் அரசாங்க துருப்புகளுக்கு உதவியாக அமெரிக்க துருப்புகள் சண்டையிடுகின்றனர். ஏராளமான அளவில் வியட்காங் துருப்புகள் இந்த சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே வடக்கு வியட்னமில் அமெரிக்க விமானங்களின் குண்டுவீச்சு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நேற்று வடக்கு வியட்னமில் அமெரிக்கவிமானங்கள் பல நிலைகளின்மீது குண்டுகளை வீசி பெருமளவில் சேதத்தை விளைவித்தன.

## பரிசீலனை செய்வதாக வாக்குறுதி

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடிப் பட்டின சபைவரியிறுப்போர் சங்கம் பட்டினசபையின் வரி மதிப்பீட்டை ஆட்சேபித்து ஸ்தலதாபன உதவி ஆணையாளர் திரு சி.எஸ். மாணிக்கவாசகரை நேரில் சந்தித்து பல விஷயங்களை தெரிவித்தனர்.

வரியிறுப்பாளர் சங்கத் தூதுக்குழுவினரால் கூறப்பட்ட விபரங்களை ஆணையாளர் கேட்டுக்கொண்டவிடன் இரண்டு வாரங்களில் தாம் நேரில் வந்து வரிமதிப்பீடுபற்றிப் பரிசீலனை செய்வதாக தூதுக்குழுவுக்கு உறுதியளித்ததுடன் வரிமதிப்பு ஆட்சேபனைகளை வரியிறுப்பாளர் விரைவில் தமக்கு அனுப்பிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டாராம்.

# அயூப் - வில்ஸன் சந்திப்பு

## இந்திய - பாகிஸ்தான் நெருக்கடி குறித்து ஆராய்ந்தனர்

லண்டன், டிச. 12

பாகிஸ்தான்அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் நேற்று இங்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இரு தலைவர்களும் நடத்திய பேச்சுக்களின் விபரங்கள் அறிவிக்கப்படாதபோதிலும், இவர்களின் பேச்சுக்களில் முக்கியமாக இந்திய-பாகிஸ்தான் நெருக்கடிகளும், இந்தோனேஷிய-மலேசிய தகராறும் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

அதிபர் அயூப்கான் இங்கு பல மந்திரிகளையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

## கம்யூனிஸ்ட் தினசரி தடை

காட்டூம், டிச. 12

கம்யூனிஸ்ட் தினசரி இதழான 'அல்மோடன்' 20,000 பிரதிகளை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இங்கு பறிமுதல் செய்தனர். (பி. டி. ஸி.)

## ஜப்பானுக்கு பரிசு

டோக்கியோ, டிச. 12

சர்வதேச பத்திரிகைப் புகைப்பிடிப்பாளர்களிடையே நடைபெற்ற போட்டியில் ஜப்பானிய புகைப்பிடிப்பாளர் திரு. யோச்சி சவடா (29 வயது) வெற்றி பெற்றுள்ளார். (பி. டி. ஸி.)

## நீவின் — அயூப். சந்திப்பு?

ரங்கூன், டிச. 12

பர்மிய புரட்சிச் சபைத் தலைவர் ஜெனரல் நீவினும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் விரைவில் சந்திக்க விருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்கள் பர்மா—பாகிஸ்தான் எல்லைகுறித்து ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பி. டி. ஸி.

## ரொடீஷியா

லண்டன், டிச. 12

ரொடீஷியா சம்பந்தமாக காமன்வெல்தைக் கூட்டுவது குறித்து ஆராயும் பொருட்டு நைஜீரியப் பிரதமர் அபூபக்கர் தஃபாபா பலேவா லண்டன் வந்துள்ளார். பிரிட்டிஷ் பிரதமர் இது குறித்து பேச்சுக்கள் நடத்துவார்.

## இந்தியாவுக்கு பர்மா அரிசி

கல்கத்தா, டிச,12

இந்தியாவுக்கு 1,50,000 தொன் அரிசியை விற்பனை செய்ய பர்மிய அரசாங்கம் தயாராக விருக்கிறதென்று இங்கு சுற்றுவிஜயம் செய்யும் பர்மிய தூதுகோஷ்டியின் தலைவர் லெப்டினன்ட் கேர்ணல் யாப் [illegible] தெரிவித்துள்ளார். (பி.டி.ஸி.)

## பொங்கலுக்கு புதிய நாடகம்

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலி கலைவாணி நாடக மன்றத்தினர் எதிர்வரும் பொங்கல் விழாவையொட்டி ''உடையார் வீட்டுச் சம்பந்தம்'' என்னும் நாடகத்தை மேடையேற்ற ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

## தமிழ் மாணவர்களின் குறைபாடு

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பு விவேகானந்தா சபை தமிழ் பேசும் இந்து மாணவர்களின் நிலைமை குறித்து அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க தீர்மானித்துள்ளது. இது விஷயமாக தமிழ்பாடசாலைகள் பூட்டப்பட்டது பற்றியும் வேறு தமிழ் மாணவர்கள் குறைபாடுபற்றியும் அறிந்தோர் விவேகானந்தா சபையின் பொதுக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## மாணவர் களை பிடுங்கினர்

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் [illegible] களை பிடுங்கினர்.

# "கைத்தொழில் மூலம்தான் வேலைவாய்ப்புக் கிடைக்கும்"

## வட்டுக்கோட்டை எம். பி. விளக்கம்

சுழிபுரம், ஞாயிறு

''இன்றுஎமது சமூகத்தை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்னை வேலையில்லாப் பிரச்னையாகும். குறிப்பாக உடல் உழைப்பாளர்களிலும் பார்க்க படித்தவர்களென்று கூறப்படுபவர்கள் மத்தியில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடுகிறது. இப் பிரச்னையை கைத்தொழில் அபிவிருத்தி மூலம் தான் தீர்க்க முடியுமென்ற நம்பிக்கையுடன் மக்களின் சுபிட்சமான வாழ்வை வழிநடத்திச் செல்ல பலநோக்கு கூட்டுறவுச் சமாஜங்கள் பல பாடுபட்டு உழைக்கின்றன. அதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவையாகும்'' என பண்டத்தரிப்பு கோவிற்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜத்தினர் புதிதாகநிறுவிய நெசவு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். விழா வைபவத்துக்கு சமாஜத்தின் தலைவர் திரு.நீ. ஜேம்ஸ் தலைமைவகித்தார். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில், இந்தியாவிலிருந்தும், தென்னிலங்கையி லிருந்தும் இறக்குமதிசெய்யும் கைத்தறி துணிகளுக்கும் எமது பகுதியில் குடிசைப் பகுதியினரால் செய்யப்படும் கைத்தறி துணிகளுக்கும்அதிக வித்தியாசம் உண்டு எனவும் இறக்குமதி செய்பவைநல்லவையாகவும், நாம் உற்பத்தி செய்பவை மட்டரகமாகவும் இருப்பதற்கு உண்மையான காரணம் எமது பகுதியில் நெசவு செய்பவர் பலர் வீட்டிலிருந்து விடுகிறார்கள் என்றும் புதிதாகச்சேர்பவர்கள் தான் வேலை செய்கிறார்களென்றும் கூறினார்.

''உள்நாட்டு அமைச்சர் திரு. தகநாயகா, துணி தட்டுப்பாட்டை போக்க இலங்கை பூராவும் ஆயிரம் நெசவு நிலையங்களை அரசாங்கத்தின் பொறுப்பில் விரைவில் ஸ்தாபிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அவற்றையும் நாம்பெற்றுக் கொள்வோம். அதே வேளையில் கூட்டுறவு பகுதியினர் தொடங்கும் நெசவு நிலையங்களுக்கு ஏற்படும் கஷ்டநஷ்டங்களை போக்க நாம் அரசாங்கத்துடன்தொடர்பு கொண்டு ஆவன செய்வோம்'' என்று திரு.அமிர்தலிங்கம் கூறினார். தலைவர் திரு.நீ,ஜேம்ஸ் பேசுகையில் அரசாங்கம் காட்டிவரும் மாற்றுந்தாய் மனப்பான்மையால் சமாஜம்முன்னேற முடியாமல் இருக்கிறதென்றார்.

கூட்டுறவு உதவிஆணையாளர் எஸ். பொன்னுத்துரை பண்டத்தரிப்பு கிராமசபை தலைவர் என். இராமலிங்கம், திரு. வி. பொன்னம்பலம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சங்கீதக் கல்லூரி நிறைவு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ரசிகரஞ்சன சபாவின் சங்கீதக் கல்லூரியின் 3-வது ஆண்டு நிறைவுவிழா இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மணிகூட்டு வீதியிலுள்ள சன்மார்க்க போதனு ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தலைமையில் கொண்டாடபடவிருக்கிறது. இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து சொற்பொழிவாற்றவிருக்கிறார்கள்.

கல்லூரியினுல் நடத்தப்பட்ட சங்கீதப்பரீட்சையில் சித்திபெய்திய மாணவர்களுக்கு திருமதி திருச்செல்வம் தராதரப்பத்திரங்களை வழங்குவார். பல கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## ஆண்டுவிழா

மன்னுர், ஞாயிறு

''தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும். கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். அப்போதுதான் சகல உரிமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்; தொழிலாளர்களின் உரிமையைப் பெற்றுத் தர முயற்சி செய்வேன்'' என்று மன்னுர் ஸ்தலஸ்தாபன ஊழியர் சங்க ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய பட்டினசபைத் தலைவர் ஜனுப் றகீம் கூறினுர். பட்டினசபை மண்டபத்தில் நடந்தேறிய இவ்விழாவில் தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். கீழ்க் கண்டவர்கள் நடப்பு வருடத்தின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. மதுரை, உபதலைவர்: அ. அகுஸ்ரின், செயலாளர்: வ. நட்சேத்திரம், தனுதிகாரி: மு. வள்ளி.

## கலா நிலைய திறப்புவிழா

அச்சுவேலி, ஞாயிறு

வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அச்சுவேலி வைத்தியசாலைக் கண்மையில் அமைந்துள்ள கலா நிலயத்தைத் திறந்துவைத்தார். இந்நிலையத்தின் உரிமையாளரான திரு. துரைரத்தினம் திரு. அமிர்தலிங்கத்தின் உருவப்படம் ஒன்றைத் தமது கையால் வரைந்து அன்பளிப்புச்செய்தார். கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

கொள்ளைலாபம்

## பெண்ணுக்கு சிறையுடன் அபராதம்!

அம்பாறை, ஞாயிறு

வெங்காயத்தை விலையைக் கூட்டி விற்றதற்காக சம்மாந்துறையைச்சேர்ந்த ஒரு பெண் வியாபாரிமீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கல்முனை மாஜிஸ்திரேட் திரு. கே. சி. ஈ. டீ. அல்வர் ஒருவார சிறைத்தண்டனையுடன் 50 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

வெங்காயத்தின் கட்டுப்பாட்டுவிலை ருத்தல் 35 சதமாக இருந்தபோது, 60 சதமாக விற்றதாக அப்பெண் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## இடமாற்றம்

வவனியா, ஞாயிறு

கடந்த நான்குவருட காலமாக வவனியா தபால்கந்தோரில் உதவி தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. ஐயம்பிள்ளை அடுத்த வருடம் தை மாதம் முதல் திகதியிலிருந்து லிண்டுல தபாற்கந்தோருக்கு தபால் அதிபராக பதவி உயர்வு பெற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சனசமூக நிலைய சமாஜ கூட்டம்

அச்சுவேலி, ஞாயிறு

வலிகாமம் கிழக்கு சனசமூக நிலைய சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஆசிரியர் திரு. க. சி. விஞசித்தம்பி தலைமையில் புத்தூர் கிராம சபை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமாஜ உபவிழாச்சபைஉறுப்பினர்களாகப்பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

போஷகர்கள் திருவாளர்கள்: க. சுந்தரமூர்த்தி, கே. வி. எஸ். சண்முகநாதன், சி. நடராசா, தலைவர்: திரு. க. சி. விஞசித்தம்பி, உபதலைவர்: திருமதி வேதவல்லி கந்தையா, செயலாளர்: திரு. த. வேலுப்பிள்ளை, பொருளாளர்: வே. நவரத்தினம்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் வெ. கணபதிப்பிள்ளை, திருஞானசம்பந்தன். ஆ. மயில்வாகனம், த. அம்பலவாணர், வி. செல்லத்துரை.

## சினிமா ரசிகர் சங்கம்

உடுப்பிட்டி, ஞாயிறு

''நவநாகரிகம் மிகுந்த இன்றைய உலகில் உணவு, உடை, கல்வி முதலியன அத்தியாவசிய தேவைகள் போன்று சினிமாவும் பொதுமக்களுக்கு வேண்டியதொன்ருகிவிட்டது. சமூக, அரசியல், கலாச்சாரத் துறைகளுக்காகப் பல கழகங்கள் அமைக்கப்பட்டு போராடி வருவது போன்று சினிமாத் துறைக்கும் நம் நாட்டில் அநேக சங்கங்கள் நிறுவப்பட்டு இத்துறையை நல்லபடியாக அமையச் செய்ய முயலவேண்டும். இன்று இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் காணப்படும் சினிமாத் தியேட்டர்களில் அநேகம் நல்ல நிர்வாகத்தில் அமையவில்லை. காற்ருடி, இருக்கை வசதிகள் சரிவர இல்லாமலும், மூட்டைப் பூச்சிகளின் தொல்லையினுலும் ரசிகர்கள் அவஸ்தைப் படவேண்டியிருக்கிறது. இக்கஷ்டங்களைத் தியேட்டர் முதலாளிகள் உடனடியாகக் கவனிக்கவேண்டும்'' என்று நெல்லியடி சினிமா ரசிகர் சஙகத்தை அங்குரார்ப்பணஞ்செய்துவைத்துப் பேசிய திரு ஏ. என். எஸ். நியாஸ் கூறினுர்.

திருவாளர்கள் த. பாலகிருஷ்ணன், கே. இராஜதுரை ஆகியோரும் பேசினர். சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. என். எஸ். நியாஸ். செயலாளர்: திரு. மா. சிவஞானசுந்தரம். பொருளாளர்: திரு. தி. பஞ்சராசா.

ஐவர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## வாலிபர்கள் சிரமதானம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட ஒடக்கரை வட்டாரத்தில் பெருமழை காரணமாக வீடுகளில் புகுந்த வெள்ளத்தை அப்புறப்படுத்தி வீட்டில் உள்ளவர்களை வெளியே கொண்டு வரும் பணியை வட்டார வாலிபர்கள் செய்துமுடித்தனர்.

திரு. எம். பாலசுந்தரம் தலைமையில் ஆரம்பமான இச்சிரமதானப்பணியில் கலந்துகொண்ட வாலிபர்களுடன் வட்டார அங்கத்தவரும் சேர்ந்துகொண்டார். இச்சேவை செய்த வாலிபர்களை நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா

## சிங்களச் சட்டம் போல...

### ஆசிரியர் சங்க தீர்மானம்

நீர்வேலி, ஞாயிறு

'சிங்கள மொழிச்சட்டம்' 1956-ம் ஆண்டுக்கு முன்புள்ள அரசாங்க உத்தியோகத்தர்களைப் பாதிக்கக் கூடாது என்பதுபோன்று 1960-க்கு முன் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிப்பதற்குமுன் முகாமையாளர்களால் நியமனம்பெற்ற ஆசிரியர்களுக்கு மாற்றம் இருக்கக்கூடாது' என்ற தீர்மானம் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்க விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பேசியபின் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. ச. பொன்னுத்துரை பேசுகையில், அண்மையில் நடைபெறவிருக்கும் திட்டமற்ற பாரபட்சமான இடமாற்றத்தினுல் இங்குள்ள பாடசாலைகளின் கல்வித்தரம் குறைக்கப்படுவதோடு தென்னிலங்கையிலுள்ள பிள்ளைகளின் கல்வியும் சீர்குலையப்போகிறதுஎன்ருர்' தீரஆலோசித்து சிறந்த முடிவுகளைச் செய்யும் கல்விச் சேவைக்கமிஷன் மூலம இப்பிரச்னைகளுக்கு முடிவுகாணவேண்டும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் கல்விப்பகுதியும்தென்னிலங்கையில் பற்ருக்குறை எனக் கூறுகின்றனர். வெளி மாகாணத்தில் எவ்வளவுஆசிரியர் பற்ருக்குறை என்று இன்று வரை ஏன் கணக்கெடுக்கவில்லை?'' என்று அவர் கேட்டார்.

வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. ச. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடஇலங்கைத்தமிழாசிரியர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. த. இராசேந்திரம் 'இன்றைய ஆசிரியர்கள் நிலை' என்பது பற்றியும் அகில இலங்கைத்தமிழாசிரியர் சங்கப் பொதுக் காரியதரிசி 'ஆசிரியர் மாற்றத்திட்டமும் அகில இ. த. ஆ. சங்கமும்' என்னும் பொருள்பற்றியும் உரைநிகழ்த்தினர். கூட்டமுடிவில் எதிர்காலத்தில் தாய்ச்சங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்புத்தெரிவித்து ஏகமனதாக தீர்மானமொன்றை நிறைவேற்றினர்.

பம்பலப்பிட்டி, சனி

கொழும்பு, பதுளை ஆகிய இடங்களில் போலியோ வியாதி பரவுகிறதென்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளார்கள்.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றிவாகை சூடிய திரைக்காவியம்!

REGAL—JAFFNA
NOW SHOWING
Stewart Granger
Sylva Koscina
IN
SWORDS MAN OF SIENNA

8-வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த

விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்




நத்தார் - புத்தாண்டு பண்டிகைகளை
முன்னிட்டு
சகாய விற்பனை
கண்கவர் டிசைன்களில்
சாறிகளும் றெடிமேட் உடுப்புகளும்
மற்றும்
பலவிதமான ஜவுளி தினிசுகளும்
குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.
கையிருப்பு முடியுமுன்
உங்களுக்குத் தேவையானவற்றை தெரிவுசெய்ய
அன்புடன் அழைக்கிருேம்.
திருமண வைபவங்களுக்கு தேவையான
கூறை சாறிகள்
பலவிதமான டிசைன்களில் எம்மிடம் கையிருப்பில் உண்டு.
மைலண்ட்ஸ்
115, 117, கே. கே. எஸ். ரேட், — யாழ்ப்பாணம்.





சைலால்
முகப்பரு, சொறிசிரங்கு
கரப்பான், கக்கூஸ்பத்து,
வெட்டுக்காயம், வேனல்
கட்டி, தீப்பட்டபுண்,
சேத்துப்புண், பித்தவெடிப்பு
முதலிய சரும வியாதிகளைக்
குணப்படுத்துகிறது.
துணிகளில் கறைபிடிக்காது
தயாரிப்பவர்கள்
"ராதா புறடக்ஸ்"
விநியோகஸ்தர்:—
எஸ். சுப்பிரமணியம் அன் கோ
53, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம்

17-ம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 2332-1961 இன் 60ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம் (மேல்) யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப்பத்தி II இல் உள்ள ஏற்ற டதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி III ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IV ல் குறிப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம்
(மேல்) யாழ்ப்பாணம்.

1965-ம் ஆண்டு மார்கழி மாதம்,
யாழ்ப்பாணம்.

அட்டவணை

| பத்தி I | பத்தி II | பத்தி III | பத்தி IV |
|---|---|---|---|
| கிராமச் சபையின் பெயர் | திகதி | நேரம் | இடம் |
| மிருசுவில் | 21-12-65 | 10-00 மு. ப. | கிராமச்சபை அலுவலகம், மிருசுவில் |

## கேள்வி விளம்பரம்
### நயினுதீவு புங்குடுதீவு ஆயச் சேவை

நயினுதீவு புங்குடுதீவு ஆயச்சேவையின் தலைவர் அவர்களால் 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 24 ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிவரை ஷெ சேவைக்கு ''சீல்'' வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரத்தின்பொருட்டு ரூபா 50-00 கட்டி 22-12-65 புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை புங்குடுதீவு கிராம சபை அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்திற்குக் கட்டிய பணத்தில் ரூபா 5-00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. விபரங்களை நயினுதீவு கிராம சபையிலும், புங்குடுதீவு கிராம சபையிலும் கரும நேரங்களில் அறிந்துகொள்ளலாம். கேள்விப் பத்திரம் நயினுதீவு கிராமசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ''சீல்'' வைத்த கேள்விப் பெட்டிக்குள் போடப்படவேண்டும். தவறின் பதிவுத் தபால்மூலம் தலைவர், நயினுதீவு-புங்குடுதீவு ஆயச்சேவை, நயினுதீவு என்ற விலாசத்திற்குக் குறித்த நேரத்திற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் பிரதி ஒன்று அதே நேரத்தில் உள்ளூராட்சி உதவி அதிபர், யாழ்ப்பாணம், அவர்களுக்கு அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
கு. வி. தம்பித்துரை,
காரியதரிசி,
நயினுதீவு-புங்குடுதீவு
ஆயச்சேவை.

10-12-65

1300

## உணவுப் பொருள்கள்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

அடுத்த கிழமையளவில் அதிக உணவுப் பொருள்கள் இங்கே வந்தசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

பம்பாய் வெண்காயம், பருப்பு மற்றும் உணவுப் பொருள்கள் உட்பட வேண்டியளவு மக்களின் தேவைக்கேற்றவாறு இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமயதீட்சை

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் கோவிலில் இருபத்தாறுபேருக்கு சமய தீட்சையை அக்கோவில் குருக்கள் நடாத்தி வைத்தார். அன்று சைவப்புலவர் இ. வே. கந்தையா, தேவார பாராயணம் செய்ய விசேஷ அபிஷேக ஆராதனையும் நடைபெற்றது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னும், பாண்டிய ராஜ்யத்திலிருந்து இளவரசர் விஜயா அழகான பெண்களை வரவழைத்துவந்ததாயும், இப்போதும்கூட இத்தீவுக்கு வருவதில் ஆண்களை விட பெண்களுக்கு அதிக சலுகை இருப்பதாகவும் சொன்னுர். உண்மைதானு?

லீலாவதி என்ற பெண்மணி 1958-ம் வருடம் இந்தியாவிலிருந்து இலங்கை வந்து, இங்கு ஒரு பரம்பரை பிரஜையை விவாகம்செய்து கொண்டார். ஆனுல் குடியேற்ற அதிகாரிகள் அந்தப் பெண்ணை திரும்பிச் சென்றுவிடவேண்டுமென்று உத்தரவிட்டனர். இதை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் லீலாவதி அப்பீல் செய்தார். இந்த தம்பதிகளின் நிலைமை பரிதாபமாயினும், அப்பெண் மந்திரியின் உத்தரவுப்படி இந்தியா திரும்ப வேண்டியதுதானென்றும், அப்புக்காத்து தியாகலிங்கம் விதித்தபடி, மனித உரிமை சாஸனம் இலங்கையின் சட்டத்தில் இடம்பெறவில்லையென்றும் தீர்ப்பளித்துவிட்டனர். அடபாவமே!

ஃ ஃ ஃ

விண்ணிரியுந் திரிபுரங்களெரிய வைத்தார் வினை தொழுவார்க் கறவைத்தார் துறவி வைத்தார், கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார் கடிக்கமல மலர்வைத்தார் கயிலை வைத்தார், திண்ணெரியுந் தண்புனலு முடனே வைத்தார் திசை தொழுது மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி, நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானுர் நல்லவாறே.

—அப்பர் அடிகள்

## நாகேந்திரா வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

அராலி நாகேந்திரா மடம் விளையாட்டுக் கழக கோஷ்டிக்கும் சண்டிலிப்பாய் கலைவாணி விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அராலி நாகேந்திராக் கோஷ்டி வெற்றிபெற்றது.

சண்டிலிப்பாய்விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில்நாகேந்திரா கோஷ்டியினர் இரண்டு கோல்களையும் கலைவாணி கோஷ்டியினர் ஒரு கோலையும் போட்டனர்.

## இலவச படக்காட்சி

சுழிபுரம், ஞாயிறு

பிரித்தானிய தகவல் பகுதியினர் இலவச படக்காட்சியை நேற்று மாலை வழக்கம்பரை அம்மன் கோவில் வீதியில் காண்பித்தனர், இக்காட்சியை வழக்கம்பரை சனசமூகநிலையத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.




உதைபந்தாட்டம்

# மாநகரசபையிடம் பொலிஸ் தோல்வி

யாழ்ப்பாணம், திங்.

யாழ். விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில்நடைபெற்று வரும் அரசாங்க சேவையாளர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் மூன்றுவது போட்டியில் யாழ். பொலிஸ் பகுதியும் யாழ். மாநகரசபைக் கோஷ்டியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் மாநகரசபைக்கோஷ்டி பொலிஸ் கோஷ்டியை வெற்றியீட்டியது.

இடைவேளைக்கு முன்னர் மாநகரசபைக் கோஷ்டியை சேர்ந்த பத்மசுந்தரம் முதலாவதுகோலை பலரும் பாராட்டத்தக்கவிதத்தில்உதைத்துத்தள்ளினுர். இதை அடுத்து ஒருசில நிமிடங்களுக்கு பின்பு இக்கோஷ்டிமுன்னணி வீரரான செபஸ்தியாம்பிள்ளை ஒருகோல் போட்டார். இடைவேளையின் போது பொலிஸ் கோஷ்டி ஒருகோலும் போடாதவகையில் மாநகரசபைக் கோஷ்டி 2 கோல்கள் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின்பு பொலிஸ் கோஷ்டி எதிர்பாராத விதமாக விளையாடியது. இக்கோஷ்டியின் முன்னணி வீரரான மரியதாஸ் என்னும் வீரர் அடுத்தடுத்து இரண்டு கோல்களை உதைத்துத்தள்ளினுர். இதேபோன்று மானகரசபைக் கோஷ்டியைச் சேர்ந்த சண்முகநாதன் ஒருகோலை வெழுத்து வாங்கினுர். இதன் பின்பும் பொலிஸார் ஒரு கோல் போட்டனர். மாநகரசபைக் கோஷ்டியைச்சேர்ந்த சிறில் மரியநாயகம், பத்மசுந்தரம் கோல்காப்பாளர் தவராசா ஆகியோரின் விளையாட்டு பாராட்டக்கூடியது. இப்போட்டி முடிவில் மாநகரசபைக் கோஷ்டி 4—3 கோல்களால் பொலிஸாரை தோற்கடித்தது. மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு என். ஜேராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

# உதைபந்தாட்ட போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

வவனியா, ஞாயிறு

வவனியா உதைபந்தாட்டச் சங்க சுற்றுப் போட்டியின் கீழ் வவனியா ஒலிம்பிக் கோஷ்டிக்கும் விவசாயக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றபோட்டி இரு கோஷ்டிகளும் தலா இரண்டுகோல்கள் போட்டதால் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது.

இப்போட்டியைக் கண்டு களிப்பதற்காகப் பெரும் திரளான மக்கள் மைதானத்தில் குழுமியிருந்தனர். போட்டி மிகவும் காரசாரமாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது. சில கட்டங்களில் ஆட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது.

திரு. பி. வேலாயுதபிள்ளை திரு. எஸ். ஆர். பசுபதி, திரு. எம். ராஜசிங்கம் ஆகியோர் பாராட்டத்தக்க வகையில் விளையாடினர். இப்போட்டிக்கு திரு. வி. தங்கராசா மத்தியஸ்தராகக்கடமையாற்றினுர்.

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# மாவிட்டபுரம் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், திங்.

குரும்பசிட்டி உதயதாரகை மன்ற ஆதரவில் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் ஆரம்பமாகிய எட்டாவது வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆரம்பதினத்தன்று மாவிட்டபுரம் யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்திற்கும் ஈவினை பறக்கும் இளைஞர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற முதற்பிரிவுப் போட்டியில் மாவிட்டபுரம் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பமாகி சுமார் பத்து நிமிட நேரத்தின்பின் மாவிட்டபுரம் கோஷ்டி முன்னணி வீரர் சுந்தரலிங்கம் ஒரு கோலைப் போட்டு, தமது கோஷ்டிக்கு ஒரு கோலைப்பெற்றுக்கொடுத்தார். பந்து மாறி மாறி இரு கோல் முகாம்களுக்கும் சென்றுகொண்டிருந்தது இடைவேளைக்கு சற்றுநேரத்திற்கு முன் ஈவினைக் கோஷ்டியைச் சேர்ந்த சிவரத்தினம், தமது கோஷ்டி வீரரான தம்பிராசாவின் உதவியுடன் ஒருகோலைப்போட்டு கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்திக்கொண்டார். இடைவேளையின்போது கோல் எண்ணிக்கை 1—1 ஆக இருந்தது.

இடைவேளைக்குப்பின் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஈவினைக் கோஷ்டி முன்னணி வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடி மாவிட்டபுரம் கோல்முகாமிற்குள் பலதடவைகள் பந்தைச் செலுத்திய பொழுதிலும், மாவிட்டபுரம் கோல் காப்பாளர் ஒருவாறு அவற்றைத் தடுத்து நிறுத்திக் கொண்டார். போட்டியின் இறுதிக்கட்டத்தில் மாவிட்டபுரம் கோஷ்டியைச்சேர்ந்த சத்தியநாதன் ஒருகோலைப்போட்டார். இதன் மூலம், போட்டி முடிவில் மாவிட்டபுரம் யுனைட்டெட் கோஷ்டி, ஈவினை பறக்கும் இளைஞர் கோஷ்டியை 2—1 கோல்களால் தோற்கடித்தது.

மேற்படி போட்டிக்கு திரு. மணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

இதே தினத்தன்று போயிட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் சுன்னுகம் 'டைனுஸ்' விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற இரண்டாம் பிரிவுப் போட்டியில் சுன்னுகம் கோஷ்டி 1—0 கோல்களால் வெற்றியீட்டியது.

மேற்படிபோட்டிக்கு திரு. ஜெயராசசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

(Exide Batteries) எக்சைட் பற்றறிகள் எங்களிடம் சுலபமான தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 1422

இராசாவின் தோட்டம் றேட்டில் வீடுகட்டுவதற்கு உகந்த காணி 7 பரப்பு துண்டாயும் அல்லது 2 பரப்புக் கொண்ட துண்டுகளாயும் விற்பனைக்கு இருக்கின்றது. விண்ணப்பிக்கவும்:- சிவசுப்பிரமணியம், 18/3, பெர்ணுண்டோறேட், கொழும்பு-6, (Fernando Road, Colombo-6. 1478

நல்லூரில் அரசடிச் சந்திக்கும் கந்தசுவாமி கோவில் மேற்குவீதிச் சந்திக்குமிடையில் றேட்டுக்கு வடக்கே ''வினைதீர்த்தான்'' என்னும் காணி நிலப்பரப்பு 4-குளி 6; கடைகட்ட நல்லது. — அ. சிவக்கொழுந்து, தலைமையாசிரியர், குமரபுரம், பரந்தன். 1424

### தேவை

22 வயதுக்குட்பட்ட சயிக்கிள் ஓடத் தெரிந்த ஒருவர் தேவை. வங்கியில் ரூபாய் கட்டக்கூடிய அனுபவம் உள்ளவர் விரும்பத் தக்கது. பிணைப்பணம் ரூபா 500/- கட்டக்கூடியவர் விண்ணப்பிக்கவும். சன்லையிட் டையேஸ் அன் றைக்கிளீன், ராணி தியேட்டருக்கு அருகாமையில், பெரியகடை, யாழ்ப்பாணம். 1481

### மனேச்சர் தேவை

25 வயதுக்கு மேற்பட்டவராயும் S. S. C. சித்தியடைந்தவராயும் இருத்தல் வேண்டும். முன்அனுபவமும் கூட்டுறவுப் பயிற்சியும் விசேஷ தராதரமாய் கருதப்படும். பிணை ரூபா 1000 - சம்பளம் ரூபா 75/-க்கும் ரூபா 125/-க்கு மிடையில் தராதரத்துக்கு ஏற்ற முறையில் வழங்கப்படும். விண்ணப்பங்கள் காரியதரிசி, பரந்தன், இரசாயன ஊழியர் கூட்டுறவு நன்னேக்குச் சங்கம், இரசாயனத் தொழிற்சாலை, பரந்தன் என்று விலாசமிட்டு 31-12-65க்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ச. அந்தோனிப்பிள்ளை, தலைவர். 1482

### Education

BUILDING CONSTRUCTION & DRAUGHTSMANSHIP. Classes in Building Construction and Draughtsmanship including drawing Plans. Sections and Elevations to scale, taking out Quantities and framing Estimates with data commence on the 5th of January 1966 at the COLLEGE OF HIGHER STUDIES, Anaipanthy, Jaffna. Apply: Registrar. 1479

சுண்டிக்குளி வட்டாரம்

## 28-ம் தேதி உபதேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையின் சுண்டிக்குளி வட்டார உபதேர்தல் இம்மாதம்28ம் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். இத்தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் திரு. என். அந்தோனிப்பிள்ளையும். தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. ஜே. ஐ. ராஜரத்தினமும் நேரடியாகப் போட்டிபோடுகின்றனர். இவ்வட்டாரத்தின் முன்னுள் அங்கத்தவரான திரு. பீட்டர் சோமசுந்தரம் புறுணிக்குச் செல்வதற்காக ராஜினுமா செய்ததைத் தொடர்ந்து இந்த உபதேர்தல் நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனையில்

# மாணவர் - பொலிஸ் பயங்கர கைகலப்பு

## துப்பாக்கிப் பிரயோகத்தின் பின் ஆயுதந்தாங்கிய பொலிஸ்காவல்

### 160 மாணவருக்கும் 40 பொலிசாருக்கும் படுகாயம்

### பல்கலைக்கழகம் மூடப்பட்டு வெளியேற்ற உத்தரவு

கொழும்பு, சனி

பேராதனையில் உள்ள பல்கலைக் கழகத்தில் இன்று மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே ஏற்பட்டகைகலப்பில், மாணவிகள் உட்பட சுமார் 160 மாணவர்களும் 40 பொலிசாரும் காயமடைந்தனர்.

மாணவர்களின் அட்டகாசத்தை அடக்குவதற்கு பொலிசார் படிப்படியாக, முதலில் குண்டாந்தடிப்பிரயோகமும், பின்னர் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும், இறுதியில் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யவேண்டி ஏற்பட்டதாம்.

### வெளியேற உத்தரவு

இங்கு ஏற்பட்ட இந்தப் பயங்கர சம்பவத்தைத் தொடர்ந்து 18 மணி நேரத்திற்குள் மாணவர் யாவரும் பல்கலைக்கழக சுற்றுடலிலிருந்தும், தமது விடுதிகளிலிருந்தும் வெளியேற வேண்டுமென பல்கலைக்கழக அறிக்கை ஒன்றில் உத்தரவிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மாணவரும், மாணவியரும் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் ஓட்டம் பிடிக்கும் காட்சி பெரும் பரிதாபமாகவிருந்தது.

### தீ வைக்க முயற்சி

ஆரம்பத்தில் பல்கலைக்கழகஉபவேந்தர் திரு. நிக்கலஸ் அட்டிகலையின் வாசஸ்தலத்துக்கு தீவைக்க மாணவர்கள், முயற்சித்ததாகவும் அப்பொழுதே பொலிசார் அதில் தலையிட்டதாகவும் அறியப்படுகிறது. மாணவர்கள், பொலிசார் தலையிட்டதும் மேலும் தீவிரமாக ஆர்ப்பாட்டமும், அட்டகாசமும் செய்தனர். இதைத்தொடர்ந்து பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தனர். பொலிஸ்-மாணவர் கைகலப்பு நீடித்து பின்னர் பொலிசார் கண்ணீர்ப் புகையை பிரயோகித்தனர். இதற்கும் நிலை கட்டுக்கடங்காததால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

### கார்களை நாசப்படுத்தினர்

கைகலப்பின்போது மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான இரண்டு கார்களையும், இரண்டு ஜீப் வண்டிகளையும் புரட்டி, நொறுக்கி நாசம் விளைவித்தனர்.

நிலைமை மோசமடைந்ததை தொடர்ந்து 18 மணித்தியால நேரத்திற்குள் தமது இடத்தைவிட்டு முற்றுக காலிசெய்ய வேண்டும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிக்கை வெளியிட்டது. இதைத் தொடர்ந்து மாணவர்களும், மாணவியர்களும் (பத்திரிகை அச்சுக்கும் போகும் வரை) தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறினர். இதைக்கேள்வியுற்றமாணவர்களின் அனேக பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளை அப்புறப்படுத்துவதற்காக பல்கலைக் கழகத்துக்கு விரைந்தார்கள்.

### விசாரணை நடத்த மந்திரி உத்தரவு

சம்பவம் குறித்து பல்கலைக்கழக உயர்தர அதிகாரிகள் அங்கு சென்று விசாரணை நடத்தவேண்டுமென கல்வி மந்திரி திரு. இரியகொலை உத்தரவிட்டுள்ளார்.

### ஊரடங்குச் சட்டம்!

கொழும்பு, சனி

பல்கலைக்கழத்தில் நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு அதன் கீழ் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. போராதனைப்பல்கலைக்கழக எல்லைக்குள் மட்டும் ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

### சீன ஊடுருவல்

புதுடில்லி, டிச. 11

இந்திய—நோபாள வடகிழக்கு எல்லையில் சீனு தீவிரமான வகையில் ஊடுருவல் செய்து வருவதாக இன்று ராஜ்ய சபாவில் பாதுகாப்பு மந்திரிசவான் தெரிவித்தார்

இம்மாதம் 5-ந் திகதி இரவு நம் கட்ச் பள்ளத் தாக்கில் தமது ஊடுருவலை ஆரம்பித்த சீனத்துருப்புகள் தொடர்ந்து முன்னேறி பத்துங்லா வரை முன்னேறி விட்டதாகவும் 350 சீனத் துருப்புகள் இப்பகுதியில் ஊடுருவல் நடத்தியிருப்பதாகவும் திரு. சவான் தெரிவித்தார்.

### யாருடையது?

பலாலி வீதியில் கண்டெடுக்கப்பட்டு லொறி டயர் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகாட்டி சன்மானம் கொடுத்து டயரைப் பெற்றுக்கொள்ளலாம்.

## "இந்நாட்டு வாசிகளை கைது செய்கிருர்கள்"

வவனியா, ஞாயிறு

இந்தியப் பிரஜை என்று கூறி குடியேற்றக்காரர்களை, குடியேற்ற வெளியேற்ற அதிகாரிகள் கைது செய்வது திட்டமில்லாத ஒரு நடவடிக்கையாகும். உள்நாட்டில் நிரந்தரமாக வசித்துவந்த மக்களை கைது செய்கின்றனர். பலரை பல தடவைகள் கைது செய்வது இங்கு சாதாரணமாகி விட்டது. சட்டவிரோத குடியேற்ற வாசிகளை கண்காணிக்கும் விஷயத்தில் நிரந்தரவாசிகள் துன்பப்படுவதா? என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி வவனியா இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாவட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினுர்.

திரு. கே. நடேசபிள்ளை கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று அண்மையில் மன்னுர், வவனியா ஆகிய இடங்களுக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்தது. திருவாளர்கள் விஜயசுந்தரம், இராமச்சந்திரன், வி. ஆர். சேவுகப் பெருமாள் ஆகியோர் வவனியா மாவட்டத்தில் உள்ள விவசாய இடங்களைப் பார்வையிட்டனர்.

---

### "ஒற்றுமையின்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

வேற்றனர். இதன்பின் கடற்படைத் தளபதி கமடோர் ராஜன் கதிர்காமருடன் திருக்கோணமலை கடற்படை இல்லத்துக்குச் சென்றுர். அங்கு கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டபின் கடற்படையினர் மத்தியில் பிரதமர் மேலும் குறிப்பிட்டதாவது:

#### ஒன்பது வருட துவேஷம்

சென்ற ஒன்பது வருடங்கள் இங்கு இன, மத துவேஷங்கள் நிறைந்ததாகவிருந்தது. இதனுல் நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்தது. மக்கள் சொல்லொணுக் கஷ்டங்களை அனுபவித்தனர்.

தேசிய அரசாங்கம் இன்று ஆட்சிக்கு வந்துள்ளது. சகல இன மக்களுக்கிடையிலும் நல்லுறவு ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது நமது நோக்கம்.

#### பரந்த மனப்பான்மை தேவை

உலகநாடுகள் பலவற்றிலும் இன, மத துவேஷங்கள் இருக்கின்றன. இங்கும் இது உள்ளது. சகல பிரச்னைகளையும் பரந்த மனப்பான்மையுடன் அணுகினுல் துவேஷத்தை ஒழித்து நாட்டை முன்னேற்ற முடியும்.

கடற்படையினர் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்கவேண்டும். சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை நாட்டுக்குள் நுழைய விடக்கூடாது. இந்தப் பணி கடற்படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசாபிமானத்துடன் அவர்கள் இப்பணியை செய்ய வேண்டும்.

பிற்பகல் 3 மணிக்கு பிரதமர் அதே விமானத்தில் கொழும்புக்குப் பிரயாணமானுர்.

---

### காங்கேசன்துறை பட்டினசபை தேர்தல் முடிவுகள்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை பட்டினசபைத் தேர்தல் இன்று நடைபெற்றது. திருத்தப்பட்ட புதிய தேர்தல் சட்டப்படி நடைபெற்ற இத்தேர்தல் (ஒரு சிறு அசம்பாவிதம் தவிர) அமைதியாக நடைபெற்றது. 6 வட்டாரங்களில் 15 பேர் போட்டியிட்டனர். தற்போதைய தலைவர் உட்பட 5 தற்போதைய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நான்கு பேர் தமிழரசுக்கட்சி ஆதரவாளராயினும் கட்சிரீதியில் எந்தவட்டாரத்திலும் போட்டி நடைபெறவில்லை.

தேர்தல் முடிவுகள் வருமாறு:-

முதலாம் வட்டாரம்: திரு. சு. கிருபாமூர்த்தி (தற்போதைய தலைவர்) அதிகப்படிவாக்குகள்: 39.

இரண்டாம் வட்டாரம்: வ. சதாசிவம் அதி. வா: 11.

மூன்ரும் வட்டாரம்: மு. திடவீரசிங்கம். அதி. வா: 11.

நான்காம் வட்டாரம்: டாக்டர் வே. சீனிவாசகம் அதி. வா: 4.

ஐந்தாம் வட்டாரம்: ச. சிவனடியார் அதி. வ. 213.

ஆரும் வட்டாரம்: டி. இமானுவல் அதி. வா. 97.

முதலாம் வட்டாரத்தில் நடைபெற்ற சிறு அசம்பாவிதம் காரணமாக இரண்டு பேரை பொலிசார் கைது செய்தனர்.

### உக்கிரமான கைகலப்பு

பொலிஸ் - மாணவர் கைகலப்பு பெரும் உச்சக்கட்டத்திலிருந்தது. மாணவர்களை அடக்குவதற்கு கண்டி மாவட்டத்தில்உள்ள ஒன்பதுபொலிஸ்நிலையங்களிலிருந்து பொலிசார் அழைக்கப்பட்டனர்.

### மாணவிகளும் காயமுற்றனர்

காயமுற்ற மாணவர்களில் சுமார் அரைப்பங்கினர் மாணவிகளென அறியப்படுகிறது. பல்கலைக்கழக வளவு இப்பொழுது ஒரு போர்க்களம்போலக் காட்சியளிக்கிறது.

### நிலைமை கட்டுக்கடங்கியது

கடைசியாகக்கிடைத்தசெய்திகளின்படிநிலைமைகட்டுக்கடங்கியதாக அறிவிக்கப்படுகிறது. ஆயுதந்தாங்கிய பொலிசார் பல்கலைக்கழக வளவையும், சுற்றுடலையும் காவல்புரிகின்றனர்.

### மூவர் கவலைக்கிடம்

இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி துப்பாக்கிப் பிரயோக காரணமாக மூன்று மாணவர்கள் படுகாயமடைந்து, கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

### புதிய நியமனம்

சுழிபுரம், ஞாயிறு

சங்கானை பட்டினசபைக்கு புதிய ஓவசியராக திரு. எஸ். குலசூரியன் ஜனவரி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொடிகாமம் கிராம சபையில் ஓவசியராகக் கடமையாற்றியவர்.

---


#### தேவை

பிரதிநிதிகள் மேற்பார்வையாளர் தேவை. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் 10-12-65ல் வரவும். மெரிலாண்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1463


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org